பிரதான தலைமை செய்தி, ஏப்ரல் 2017



தலைவர் டியட்டர் எப். உக்டர்ப்
பிரதான தலைமையில் இரண்டாம் ஆலோசகர்

# விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்

## யூத மதகுருவும் சோப் தயாரிப்பவரும்

கடவுளை நம்பாத சோப் தயாரிப்பவரைப்பற்றிய ஒரு பழைய யூதக்கதை இருக்கிறது. ஒருநாள் அவர் ஒரு யூத மதகுருவுடன் நடந்துகொண்டிருந்தபோது, அவர் சொன்னார், “ஒன்றை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களாக நமக்கு ஒரு மதம் இருந்திருக்கிறது. ஆனால் நீங்கள் எங்கு பார்த்தாலும், தீமையும், ஊழலும், நேர்மையின்மையும், அநியாயமும், வேதனையும், பசியும், வன்முறையும் இருக்கின்றன. மதம் உலகத்தை முன்னேற்றவேயில்லை எனத் தோன்றுகிறது. ஆகவே நான் உங்களைக் கேட்கிறேன், இதனால் என்ன பிரயோஜனம்?”

கொஞ்ச நேரத்துக்கு யூத மதகுரு பதில் பேசவில்லை, ஆனால் அவர் சோப் தயாரிப்பவருடன் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தார். இறுதியாக தூசுபடிந்து, புழுதியில் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்த ஒரு விளையாட்டு மைதானத்தை அவர்கள் அடைந்தார்கள்.

“ஒரு காரியம் எனக்குப் புரியவில்லை,” என யூத மதகுரு சொன்னார். “அந்தப் பிள்ளைகளைப் பாருங்கள். ஆயிரக்கணக்கான வருடங்களாக நம்மிடம் சோப் இருக்கிறது, ஆனாலும் அந்தப் பிள்ளைகள் அழுக்காகவே இருக்கிறார்கள். சோப்பால் என்ன பிரயோஜனம்?”

சோப் தயாரிப்பவர் பதிலளித்தார், “ஆனால் குருவே, இந்த அழுக்கான பிள்ளைகளுக்காக சோப்பைக் குற்றம் சொல்வது சரியல்ல. அதன் நோக்கத்தை அடைவதற்கு முன் சோப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.”

யூத மதகுரு புன்னகைத்துச் சொன்னார், “மிகச்சரி?”

## நாம் எப்படி வாழ வேண்டும்?

“விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்” (ரோமர் 1:17) என அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியபோது விசுவாசியாக இருப்பதன் அர்த்தம் என்ன என அவன் ஒரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியை மேற்கோள் காட்டி சுருக்கமாகச் சொன்னான்.

ஒருவேளை இந்த எளிய வாசகத்தில் நலிந்ததும், பலனற்றதுமான மதத்துக்கும், வாழ்க்கையை மாற்றிப்போடுகிற வல்லமையுடையதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்கிறோம்.

ஆனால் விசுவாசத்தால் பிழைத்திருப்பதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள நாம் விசுவாசம் என்றால் என்ன என புரிந்துகொள்ள வேண்டும்.

விசுவாசம் நம்பிக்கையை விட உயர்வானது. இது செயலுடன் கூடிய முழு தேவ நம்பிக்கை.

இது விருப்பத்தை விட உயர்வானது.

உட்கார்ந்து கொண்டு, தலையை ஆட்டி, நாங்கள் சம்மதிக்கிறோம் என சொல்வதை விடவும் உயர்வானது. “*விசுவாசத்தால்* நீதிமான் *பிழைப்பான்*” என நாம் சொல்லும்போது, நாம் நமது விசுவாசத்தால் வழிகாட்டப்பட்டு நடத்தப்படுகிறோம் என்கிறோம். நமது விசுவாசத்துக்கு ஏற்ற வகையில் நாம் *செயல்படுகிறோம்*. சிந்தனையற்ற கீழ்ப்படிதலால் அல்ல, ஆனால் தேவனிடத்தில் நம்பிக்கையுடைய உருக்கமான அன்பினிமித்தமே, மற்றும் அவர் தன் பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தியிருக்கிற விலைகொடுக்க முடியாத

ஞானத்தினிமித்தமுமே ஆகும்

விசுவாசம் செயலோடு இணைந்திருக்க வேண்டும். இல்லையெனில் அதற்கு ஜீவனில்லை (யாக்கோபு 2:17 பார்க்கவும்). அது விசுவாசமே இல்லை எனலாம்.. உலகத்தை விடுங்கள், ஒரு தனிமனிதனைக்கூட மாற்றுகிற வல்லமை அதற்கு இல்லை.

நிச்சயமற்ற நேரங்களிலும்கூட, அவர்கள் பூரணமாக பார்க்காத, அல்லது தெளிவாகப் புரிந்து கொள்ளாத சந்தேகமும் கஷ்டமுமான நேரங்களிலும், விசுவாசமிக்க ஆண்களும் பெண்களும் தங்களுடைய இரக்கமுள்ள பரலோக பிதாவை நம்புகிறார்கள்.

விசுவாசமிக்க ஆண்களும் பெண்களும் சீஷத்துவத்தின் பாதையிலே ஆர்வத்துடன் நடந்து, நமது அன்புக்குரிய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் எடுத்துக்காட்டைப் பின்பற்ற முயலுகின்றனர். விசுவாசம் நமக்கு ஆர்வமூட்டி, நமது இருதயங்களை பரலோகத்தை நோக்கி உயர்த்தவும், நமது சக மனுஷரிடம் உற்சாகமாகச் சென்று, கைதூக்கிவிட்டு, ஆசீர்வதிக்கவும் உணர்த்துகிறது.

செயலில்லாத மதம் பெட்டிக்குள்ளேயே இருக்கிற சோப் போன்றது. அதற்கு அற்புதமான வல்லமை இருக்கலாம், ஆனால் அதன் உரிய நோக்கத்தை நிறைவேற்றும்வரை உண்மையாகவே அதற்கு வித்தியாசத்தை ஏற்படுத்த வல்லமை இல்லை. இயேசு கிறிஸ்துவின் மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட சுவிசேஷம், செயலாற்றும் சுவிசேஷம். ஆவிக்குரியவிதமாகவும், உலகப்பிரகாரமான வழிகள் உள்ளிட்ட நம்பிக்கை, விசுவாசம் மற்றும் தயாளத்தின் செய்தியாக, உண்மையான மதத்தை இயேசு கிறிஸ்து சபை போதிக்கிறது.

சில மாதங்களுக்கு முன்பு என் மனைவி ஹாரியட்டும் நானும் எங்கள் பிள்ளைகள் சிலருடன் மத்தியதரைக்கடல் பகுதியில் குடும்ப பிரயாணம் செய்தோம். நாங்கள் சில அகதிகள் முகாம்களுக்குச் சென்று, போரால் சிதைந்த நாடுகளின் குடும்பங்களைச் சந்தித்தோம். அவர்கள் நமது விசுவாசத்தைச் சேர்ந்தவர்களல்ல, ஆனால் அவர்கள் நமது சகோதர சகோதரிகள், அவர்களுக்கு அவசர உதவி தேவை. மதம், தேசம் அல்லது கல்வி பொருட்டின்றி, தேவையிலிருக்கிற நமது சகமனுஷருக்கு உதவியும், நிவாரணமும், நம்பிக்கையும், நமது சபையாரின் செயலிலிருக்கும் விசுவாசம் எப்படி கொண்டுவருகிறது என்பதை நேரில் பார்த்தபோது எங்களது இருதயங்கள் ஆழமாகத் தொடப்பட்டன.

தொடர்ந்த செயலுடன் பிணைக்கப் பட்டிருக்கிற விசுவாசம் இருதயத்தை தயவினாலும், மனதை ஞானத்தாலும், அறிவாலும், ஆத்துமாவை சமாதானத்தாலும், அன்பாலும் நிரப்புகிறது.

நமது விசுவாசம், நம்மைச் சுற்றியிருப்பவர்களையும், நம்மையும் ஆசீர்வதித்து நீதியான செல்வாக்கை ஏற்படுத்த முடியும்.

நமது விசுவாசம் உலகத்தை நன்மையாலும் சமாதானத்தாலும் நிரப்ப முடியும்.

நமது விசுவாசம் வெறுப்பை அன்பாகவும், சத்துருக்களை நண்பர்களாகவும் மாற்ற முடியும்.

பின்னர் நீதிமான் விசுவாசத்துடன் செயல்பட்டு ஜீவிக்கிறான். அவர்கள் தேவனை நம்பி அவரது வழியில் நடக்கிறார்கள்.

அப்படிப்பட்ட விசுவாசம் தனிநபர்களையும், குடும்பங்களையும், தேசங்களையும், உலகத்தையும் மாற்ற முடியும்.

---

இச்செய்தியிலிருந்து போதித்தல்

விசுவாசம் நம்பிக்கையைத் தெரிவிப்பது மட்டுமின்றி, அதைவிடவும் அதிகமானது, என தலைவர் உக்டர்ப் விளக்குகிறார். பரலோக பிதாவிலும் இயேசு கிறிஸ்துவிலும் உண்மையான விசுவாசத்துக்கு செயல் தேவை, மற்றும் விசுவாசத்தால் வாழ்வது, வாழ்க்கையையும் வீடுகளையும் மாற்றும் வல்லமையுடையது. தனிப்பட்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து அல்லது பிறரைக் கவனித்ததிலிருந்து, அவர்கள் ஆசீர்வாதங்களையும் விசுவாசத்தால் வாழும் வல்லமையைக் கண்ட தருணங்களையும் பற்றி பகிர்ந்துகொள்ள நீங்கள் போதிப்பவர்களை அழைக்கலாம். சுவிசேஷத்தின்படி எப்படி சிறப்பாக வாழ்வது என அறிய வழிகாட்டுதலுக்காக ஜெபிக்குமாறு அவர்களை ஊக்குவிக்குவியுங்கள்.

## இளைஞர்

விசுவாசத்தில் பிறருக்கு சேவை செய்தல்

தேவனில் நமது விசுவாசம் “செயலோடு இணைந்திருக்க வேண்டும்,” என தலைவர் உக்டர்ப் நமக்குச் சொல்கிறார். நமது விசுவாசம் “சீரான செயலுடன் கூட பிணைக்கப்படும்போது”, அது ஆத்துமாவை சமாதானத்தோடும் அன்போடும் நிறைக்கிறது என அவர் விளக்குகிறார். இந்த ஆசீர்வாத வாக்குத்தத்தத்துடன் நாம் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த *முடியும்*, விசுவாசம் நிறைந்த சேவை செய்ய நாம் நேரம் எடுத்துக் கொண்டால், இதை நாம் நமது வாழ்வில் காண முடியும். பிறருக்கு சேவை செய்ய உதவுமாறு கர்த்தரைக் கேட்க நீங்கள் ஒவ்வொரு காலையிலும் ஜெபிக்கலாம். உதாரணமாக உடன்பிறந்த ஒருவருக்கு உதவி தேவைப்படும்போது, அல்லது நண்பருக்கு பாராட்டு தேவைப்படும்போது, உங்களுக்கு தெரிவிக்குமாறு அவரிடம் கேளுங்கள். பின்பு ஒரு ஏவுதலைப் பெறும்போது, அதன்படி செயல்படுங்கள். நீங்கள் இந்த ஜெபங்களைச் செய்து, இச்சேவையை ஒரு பழக்கமாக ஆக்கிக்கொண்டால், பின்பு உங்கள் விசுவாசமிக்க சீரான செயல் உங்கள் வாழ்க்கையையும் பிறரது வாழ்க்கையையும் ஆசீர்வதிக்கும். நீங்கள் “தனிப்பட்டவர்களையும், குடும்பங்களையும், தேசங்களையும் உலகத்தையும் மாற்ற முடியும்” என தலைவர் உக்டர்ப் வாக்களிக்கிறார்.

## பிள்ளைகள்

நம்பிக்கை

ஒரு நண்பரோடு இப்பயிற்சியை முயற்சி செய்யவும். நீங்கள் அவர்களது வழிகாட்டுதல்களை நம்பி கவனமாக பின்பற்ற வேண்டும்.

ஒரு வெற்று காகிதத்துண்டு எடுத்து முகத்தை குறிக்கிற ஒரு வட்டத்தை அதில் வரையவும். கையில் ஒரு பேனா அல்லது பென்சில் வைத்துக்கொண்டு கண்களை மூடவும். இந்த முகத்தில் எங்கு கண்கள், மூக்கு, வாய், மற்றும் முடி வரைவது என உங்கள் நண்பர் சொல்லட்டும். பின்பு பாருங்கள். அது எப்படி வந்திருக்கிறது. நீங்கள் முகத்தில் வண்ணமிட்டு திரும்பவும் விளையாட மற்றொன்று வரையவும்.

சில சமயங்களில் வழிகாட்டுதலைப் பின்பற்றுதல் கடினமாகும். ஆனால் பரிசுத்த ஆவியானவருக்குச் செவிசாய்த்து, பரலோக பிதாவைப் பின்பற்ற முயன்றால் அவர் நமக்கு உதவுவார். நாம் எப்போதும் அவரை நம்ப முடியும்.

© 2017 அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நா. ல் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16. 97924 418 ன் மொழிபெயர்ப்பு.

# ஆசாரியத்துவத்தின் உறுதிமொழியும் உடன்படிக்கையும்

இச்செய்தியை ஜெபத்துடன் படித்து, எதைப் பகிர்ந்துகொள்வது என உணர்த்துதலுக்காக நாடவும். ஒத்தாசைச் சங்கத்தின் நோக்கத்தை புரிந்துகொள்வது எப்படி நித்திய ஜீவிய ஆசீர்வாதங்களுக்காக தேவ குமாரத்திகளை ஆயத்தப்படுத்துகிறது?

விசுவாசம் குடும்பம் ஒத்தாசை

ஆசாரியத்துவத்தின் உறுதிமொழியும் உடன்படிக்கையும் சகோதரிகளாக நமக்கு தனிப்பட்டவிதமாக பொருந்துகிறதென்பதை நாம் அதிகமாக புரிந்துகொள்ளும்போது, ஆசாரியத்துவத்தின் ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தங்களையும் நாம் அதிகமாகத் தழுவிக்கொள்வோம்.

பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தின் மூப்பர் எம். ரசல் பல்லார்ட் சொன்னார், “கர்த்தருடன் பரிசுத்த உடன்படிக்கைகள் செய்து அந்த உடன்படிக்கைகளை கனம் பண்ணுகிற அனைவரும் தனிப்பட்ட வெளிப்படுத்தல் பெற தகுதிபெற்று தூதர்களின் பணிவிடையால் ஆசீர்வதிக்கப்படவும், தேவனோடு தொடர்புகொள்ளவும், சுவிசேஷத்தின் முழுமையைப் பெறவும், இறுதியாக, நமது பிதாவினுடைய அனைத்திலும் கிறிஸ்துவோடு சுதந்தரவாளிகளாகும் தகுதியும் பெறுகிறோம்.” [1]

ஆசாரியத்துவத்தின் உறுதிமொழி மற்றும் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களும் வாக்குத்தத்தங்களும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொடர்புடையன. ஒத்தாசைச் சங்க பொதுத் தலைமையில் முன்னாள் ஆலோசகர் சகோதரி ஷெரி எல். டியூ சொன்னார், “கர்த்தருடைய வீட்டின் உயர் நியமங்களில் அடங்கியுள்ள ஆசாரியத்துவத்தின் முழுமையை ஒரு ஆணாலும் பெண்ணாலும் ஒன்றாகத்தான் பெற முடியும்.” [2]

ஒத்தாசைச் சங்க பொதுத்தலைவர் சகோதரி லிண்டா கே. பர்ட்டன் இந்த அழைப்பை விடுத்திருக்கிறார், “கோட்பாடும் உடன்படிக்கைகளிலுமுள்ள 84: 33–44ல் காணப்படுகிற ஆசாரியத்துவத்தின் உறுதிமொழியையும் உடன்படிக்கையையும் மனப்பாடம் செய்ய நான் உங்களை அழைக்கிறேன். அப்படிச் செய்வதால் பரிசுத்த ஆவியானவர் ஆசாரியத்துவம் பற்றிய உங்கள் புரிந்துகொள்ளுதலை விசாலமாக்கி, அற்புதமான வழிகளில் உங்களை எழுப்புவார்.” [3]

பெண்களை “ஆசாரியத்துவத்தின் சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும், வரங்களையும் சொந்தமாக்க ” ஒத்தாசைச் சங்கத்துக்கு ஜோசப் ஸ்மித்தின் அறிவுரைகள் ஆயத்தம் செய்யும் நோக்கமுடையது. இது ஆலய நியமங்கள் மூலம் அடையப்படும்.

“ஆலய நியமங்கள் ஆசாரியத்துவ நியமங்கள்தான், ஆனால் அவை ஆண்கள் அல்லது பெண்கள் மேல் சபையின் பதவிகளை அருளுவதில்லை. [இந்த நியமங்கள்] அவருடைய ஜனமாகிய ஆண்களும் பெண்களும் உன்னதத்திலிருந்து வல்லமையால் தரிப்பிக்கப்படுவர் என்ற கர்த்தரின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகின்றன [கோ.உ 38:32].”[4]

## கூடுதல் வேத வசனங்களும் தகவல்களும்

### கோட்பாடும்

உடன்படிக்கைகளும் 84:19–40; 121:45–46; reliefsociety.lds.org

## குறிப்புகள்

1.M. Russell Ballard, “Men and Women and Priesthood Power,” *Liahona,* Sept. 2014, 36.

2.Sheri L. Dew, in *Daughters in My Kingdom: The History and Work of Relief Society* (2011), 128.

3.Linda K. Burton, “Priesthood Power—Available to All,” *Ensign,* June 2014, 39–40.

4.Gospel Topics, “Joseph Smith’s Teachings about Priesthood, Temple, and Women,” topics.lds.org.

**இதைக் கருத்தில் கொள்ளவும்**

ஆசாரியத்துவத்தின் உறுதிமொழி மற்றும் உடன்படிக்கையின் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை முற்றிலும் புரிந்துகொள்ளவும் அடையவும் நாம் என்ன செய்ய முடியும்?

© 2017 அனைத்து உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அ.ஐ.நா. ல் அச்சிடப்பட்டது. ஆங்கில அங்கீகாரம்: 6/16. மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 6/16. 97924 418 ன் மொழிபெயர்ப்பு.